மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதி இரணியம் பகுதியில் ரூ.22.10 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேலூர்– அழகர்கோவில் சாலை விரிவாக்க பணிகளை அமைச்சர்கள் எ.வ.வேலு, பி.மூர்த்தி ஆகியோர் நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் அரசு செயலாளர் செல்வராஜ், மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, சேடபட்டி மு.மணிமாறன் உட்பட நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் பலர் உள்ளனர்.

சிவகங்கையில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் நடைபெறும் பணிகளை நெடுஞ்சாலைத்தூறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார். உடன் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் , சிவகங்கை நகர் மன்ற தலைவர் சி.எம்.துரை.ஆனந்த் ஆகியோர் உள்ளனர்.

‘திராவிட மாடல்’ ஆட்சி ராக்கெட் வேகத்தில் செயல்படுகிறது என்பதற்கு இதோ மற்றொரு சான்று!

“டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி”யாக மீள் உயிர்பெற்றது!

முதலமைச்சருக்கும், உயர்கல்வித் துறை அமைச்சருக்கும் பாராட்டுகள் - நன்றி!

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை,மே.22

“டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி”யின் பெயர் சில ஆண்டுகளாக தர்மாம்பாள் பெயரின்றியே அறிவிப்புப் பலகை இருந்தது. சில வாரங்களுக்கு முன்பு, அதைப் பார்த்து வேதனையடைந்து, உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் அவர்களது கவனத்திற்குக் கொண்டு சென்றோம்; ஒரு சில மணி நேரங்களில், மீண்டும் “டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி”யாக மீள் உயிர்பெற்றது! நமது முதலமைச்சரின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ ஆட்சி செயல்படுகிறது என்பதற்கு இதுவும் மற்றொரு சான்று! முதலமைச்சருக்கும், உயர்கல்வித் துறை அமைச்சருக்கும் நமது பாராட்டும், நன்றிகளும்” என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர்

கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

1937 இல் பிரிக்கப்படாத சென்னை மாகாணத்தில், ஆட்சிக்கு வந்த காங்கிரசின் முதலமைச்சர் இராஜாஜி, ஹிந்தி - சமஸ்கிருத மொழிகளைக் கட்டாயப் பாடமாகத் திணித்தபோது, அந்தப் பண்பாட்டுப் படையெடுப்பிற்கு எதிராக தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம் களம் கண்டது. தமிழ்க்கடல் மறைமலை அடிகளார், தமிழ் உணர்ச்சி எரிமலையான நாவலர் டாக்டர் சோமசுந்தர பாரதியார், சர்.ஏ.டி. பன்னீர்செல்வம், அஞ்சா நெஞ்சன் அழகிரி ஆகியோரையெல்லாம் ஒருங்கிணைத்தார் அறிவு ஆசான். அறிஞர் அண்ணா வசந்த வாலிப வயதில் தன்னை இணைத்துக் கொண்ட இளைஞர் குழாமின் இணைப்பாளர்.

களப்போராளியாகப் பங்கெடுத்த கொள்கை வீராங்கனை!

மகளிர் பலரும் மூவாலூர் இராமாமிர்தம் அம்மையார் தலைமையில் திரண்டனர்! அவர்கள் பட்டியல் நீளமானது என்றாலும், கரந்தையைச் சார்ந்த டாக்டர் எஸ்.தருமாம்பாள் அம்மையார், களப்போராளியாகப் பங்கெடுத்த கொள்கை வீராங்கனைகளில் முதன் வரிசையர் ஆவார்!

அவரது நினைவு நாள் நேற்று (மே 20).

மொழிப் போரில் தங்களையே தந்து களமாடிய காலம் அது! மறக்க முடியாத கட்டுப்பாடு மிக்க தொண்டர்கள் நடராசனும், தாளமுத்துவும் தங்களது இன்னுயிர் தந்து, என்றும் வரலாற்றில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வீரர்கள் மட்டுமல்ல, வீராங்கனைகள் தொடர் மொழிப் போரில், தங்களை ஈந்த கொள்கை மெழுகுவத்திகளாயினர். அத்தகைய நமது தோழர்களின் நினைவைப் போற்றுகிறோம்.

அப்படிப்பட்டோரைப் பெருமைப்படுத்த திராவிடர் ஆட்சி மறக்கவில்லை என்பதை நிலைநாட்ட, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1969-1970-களிலும், அதற்குப் பிறகும் மொழிப் போர் ஈகியரின் பெயர்களை வரும் தலைமுறைக்கு நினைவூட்டும் வகையில், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமப் பன்மாடிக் கட்டடத்திற்குத் ‘தாளமுத்து- நடராசன் நினைவு மாளிகை’ என்று பெயரிட்டு சிறப்புச் செய்தார், தமிழ்நாடு அரசின் சார்பாக! அதுபோல, பலப்பல.

சென்னை பழைய மாமல்லபுரம் சாலையில் (தற்போது ராஜீவ் காந்தி சாலை), தரமணியில் அமைந்துள்ள அரசின் பல்தொழில்நுட்பக் கல்லூரியில் (பாலிடெக்னிக்) நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேருரையாற்றியபோது, உரையின் நிறைவில் இப்பாலிடெக்னிக் கல்லூரி, இனி “டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி” என்று பெயர் சூட்டப்பட்டு இயங்கும் என்று கூறி, பின் அதற்குரிய அரசு ஆணையையும் பிறப்பித்தார். வட சென்னை முக்கிய சாலைக்கு டாக்டர் தருமாம்பாள் சாலை என்று பெயர் சூட்டப்பட்டது.

நெருக்கடி நிலையிலும், அதற்குப் பின்னும் அப்பெயரை திட்டமிட்டே மறைத்து, “அரசினர் மகளிர் பாலிடெக்னிக்” என்று அழைத்தனர்; மீண்டும் தி.மு.க. ஆட்சியில் அது மாற்றப்பட்டது. இப்போது திடீரென அப்பகுதியில் சில ஆண்டுகளாக தர்மாம்பாள் பெயரின்றியே அறிவிப்புப் பலகை தொங்கியது. “டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி”யாக மீள் உயிர்பெற்றது!

சில வாரங்களுக்கு முன்பு, அதைப் பார்த்து வேதனையடைந்து, உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் அவர்களது கவனத்திற்கு உடனடியாகக் கொண்டு சென்றோம்.

அதனைக் கண்ணுற்ற உயர்கல்வித் துறை அமைச்சர், சம்பந்தப்பட்ட பல்தொழில்நுட்பக் கல்லூரி அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு பேசியதன் விளைவாக, ஒரு சில மணி நேரங்களில், மீண்டும் “டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி”யாக மீள் உயிர்பெற்றது! நமது பாராட்டும், நன்றிகளும்!

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி., தலைமையில்

நீலகிரி மாவட்ட கழக வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

மாவட்ட பொறுப்பாளர் கே.எம்.ராஜு அறிவிப்பு!

நீலகிரி,மே.22-

2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து ஆலோசிக்க, நீலகிரி மாவட்ட திமுக வழக்கறிஞர் அணியின் நிர்வாகிகள் கூட்டம் திமுக சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி அவர்கள் தலைமையில் எதிர்வரும் 26.5.2025-திங்கட்கிழமை காலை 11 மணியளவில் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் நீலகிரி மாவட்ட கழக நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு கேட்டுக்கொண்டார்.

மதுரை வடக்கு மாவட்டம்

பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்

தேர்தல் முடிவு

தலைமைக் கழக அறிவிப்பு

மதுரை வடக்கு மாவட்டக் கழக நிர்வாக அமைப்பில் “மதுரை மேற்கு” சட்டமன்றத் தொகுதியினை சேர்த்து கடந்த 13.2.2025 அன்றைய தலைமைக் கழக அறிவிப்பு வெளியிட்ட காரணத்தால், மதுரை வடக்கு மாவட்டத்தில் இரண்டு பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால்,

மதுரை வடக்கு மாவட்டம், இரண்டு பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, மே 20 (செவ்வாய்கிழமை) அன்று ரூ.25000/–வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

மதுரை வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புகளுக்கு எம். மனோகரன் மற்றும் எ.கே. முருகானந்தம் ஆகியோர் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

மதுரை வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர்களாக,

திரு. எம். மனோகரன்
5, காந்திஜி ரோடு, பரவை, பரவை பேரூராட்சி,
மதுரை - 625402.

திரு. எ.கே. முருகானந்தம்
28சி/2, ஸ்ரீவீரமாகாளி இல்லம், புலிப்பாண்டியன் தெரு,
ஜெய்ஹிந்துபுரம், மதுரை - 11. **ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.**

“அண்ணா அறிவாலயம்”
சென்னை – 18.
நாள் : 21–05–2025.

துரைமுருகன்,
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி, காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் 1434 ஆம் பசலி ஆண்டிற்கான வருவாய் தீர்வாயத்தை நேற்று (21.05.2025) சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்து, பொதுமக்களின் மனுக்களுக்கு விரைந்து தீர்வு காணுமாறு அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். உடன் மேயர் மகாலட்சுமி யுவராஜ், காஞ்சிபுரம் ஒன்றியக் குழு பெருந்தலைவர் மலர்கொடி குமார், மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம், ஒன்றியச் செயலாளர் பி.எம். குமார், பகுதிக் கழக செயலாளர்கள் கே.திலகர், சு.வெங்கடேசன், மாவட்ட மாணவர் அணி நிர்வாகிகள் தி. இராம்பிரசாத், எஸ். தமிழ்செல்வன், கழக நிர்வாகிகள் ஆர். வினோத்குமார், பி.எஸ். குடியரசு, எம். மகாவீர்சந்த், மாமன்ற உறுப்பினர்கள் வ. கமலக்கண்ணன், ஏ. சரவணன், வட்டாட்சியர், அரசு அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக அலுவலக பணியாளர் முன்னேற்ற சங்கம் (திண்டுக்கல்) நிர்வாகிகள்!

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக அலுவலக பணியாளர் முன்னேற்றச் சங்கத்தின் (திண்டுக்கல்) நிர்வாகிகளாக (பதிவு எண். 118/ANNA. பேரவை இணைப்பு எண். 703) கீழ்க்கண்டவர்கள் அறிவிக்கப்படுகிறார்கள்.

சங்க நிர்வாகிகள்

தலைவர் - ஏ. மார்டின் லூயிஸ் (பணி எண். 45017)

துணைத் தலைவர் - எம். சூர்யபிரகாஷ் (பணி எண். 35013)

பொதுச்செயலாளர் - எஸ். குமரேசன் (பணி எண். 30825)

துணைப்பொதுச்செயலாளர் - ஆர்.சீனிவாசன் (பணி எண். 30828)

பொருளாளர் - எஸ். சரவணன் (பணி எண். 30882)

செயலாளர் - என். முத்துராஜ் (பணி எண். 35050)

பொதுக்குழு உறுப்பினர்கள் -

1) ஆர்.பேச்சம்மாள் (பணி எண். 30860)
2) டி. தினேஷ்குமார் (பணி எண். 35012)
3) பி.தங்கமணி (பணி எண். 45213)

இடம் : கலைஞரகம்
நாள்- 21.05.2025

மு.சண்முகம் எம்.பி.,
பொதுச் செயலாளர்
தொ.மு.ச. பேரவை

சென்னை தெற்கு – காஞ்சிபுரம் வடக்கு – சேலம் கிழக்கு – புதுக்கோட்டை தெற்கு மாவட்டங்கள்

பொதுக்குழு உறுப்பினர்கள் பொறுப்புக்களுக்கான தேர்தல்

தேர்தல் முடிவு

தலைமைக் கழக அறிவிப்பு

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் சென்னை தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் சைதை சம்பத் – காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் எம்.டி. சண்முகம் – சேலம் கிழக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் ஷேக்மொய்தீன் – புதுக்கோட்டை தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் சீனி. பழனியப்பன் ஆகியோர் உடல் நலிவுற்று மறைவெய்திய காரணத்தால் மேற்கண்ட மாவட்டங்களுக்கான பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புகளுக்குப் போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, மே 20 (செவ்வாய்கிழமை) அன்று ரூ.25000/– வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்” என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிற்கு தலா ஒருவர் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவர்களது மனு ஏற்கப்பட்டு,

சென்னை தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக

திரு. களக்காடி எல்லப்பன்
5/3, 72வது தெரு,
ஆர்.வி. நகர்,
ஜாபர்கான்பேட்டை,
சென்னை - 600083 **அவர்களும்;**

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக

திரு. ஜிஜேந்திரன் ராமு,
4, கம்பர் தெரு,
நந்திவரம் - கூடுவாஞ்சேரி,
செங்கல்பட்டு - 603202 **அவர்களும்;**

சேலம் கிழக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக

திருமதி. என். அன்னபூரணி
டி.எஸ்.பி. தோட்டம்,
ஊனத்தூர் வழி,
தலைவாசல், ஆத்தூர் தாலுக்கா,
சேலம் மாவட்டம்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக

திரு. ஆர். கருப்பையா
228, புதூர், ராயவரம் அஞ்சல்,
திருமயம் தாலுக்கா,
புதுக்கோட்டை மாவட்டம். **ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.**

“அண்ணா அறிவாலயம்”
சென்னை – 18.
நாள் : 21–05–2025.

துரைமுருகன்
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

திருவள்ளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தியின் முதல் நாள் நிகழ்ச்சி துவங்கி நடைபெற்றது. திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் பங்கேற்று பொதுமக்களிடத்தில் மனுக்களை பெற்றார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளரும் (தேர்தல்) வருவாய் தீர்வாய் அலுவலருமான டி. ஸ்ரீராம், வட்டாட்சியர் ந. ரஜினிகாந்த், நில அளவை துறை ஆய்வாளர் செந்தில்குமரன், நகராட்சி தலைவர் உதயமலர் பாண்டியன், ஒன்றிய கழக செயலாளர்கள் மோ.இரமேஷ், எஸ். மகாலிங்கம், நகராட்சி முன்னாள் தலைவர் பொன். பாண்டியன், நகர் மன்ற உறுப்பினர் தாமஸ் (எ) ராஜ்குமார், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் தா. மோதிலால், ஜி. வேலாயுதம், ஜெய் கிருஷ்ணா , இராஜா, வட்ட நில அளவர் தனசேகர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் கலைச்செல்வி, மண்டல துணை வட்டாட்சியர்கள் தினேஷ் , நரசிம்மன், ஆதி, வட்ட துணை நில அளவர் பவானி, வருவாய் ஆய்வாளர்கள் உதயகுமார், விஜயலக்ஷ்மி, கிராம நிர்வாக அலுவலர்கள் பாரதி, ஜான்சன், ராதிகா, டில்லி, பாபு, ஆனந்த், சேலை சுப்பிரமணி உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.